IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.137/2010
DEPOSITION OF WITNESS

<u>வா.சா. 2சாட்சி இந்திரன்        த.பெ.பாண்டியன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 06.03.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு  விசாரணை</u> :

1. நான் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதி என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடம் பிரச்சனை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஆதியில் சின்னகருப்பதேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றால் சரிதான். மேற்படி சின்னகருப்பத்தேவருக்கு எவ்வளவு இடம் பாத்தியம் என்று தெரியுமா என்றால் 7 செண்டு பாத்தியம். சின்னகருப்பதேவரிடமிருந்து மருதையாநாயக்கர் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் 7 செண்டு கிரையம் பெற்றாரர். மருதையாநாயக்கரிடமிருந்து எனது தகப்பனார் பாண்டி எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது.

2. நான் பூமயில் என்பவருக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலத்தை விற்பனை செய்தீர்கள் என்றால் அதே 7 செண்டு ஆகும். பத்திரத்தில் 7 செண்டு என்று குறிப்பிடவில்லை என்றாலும் நான் விற்பனை செய்த சொத்தின் பத்திரத்தில் 6 1/2 செண்டு விஸ்தீரணம் உள்ள 2825 ச.அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் எவ்வளவு

விஸ்தீரணத்திற்கு விற்றுள்ளேன் மற்றும் எந்த தேதியில் விற்பனை செய்துள்ளேன் என்ற விபரம் தெரியாமல் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்படி இடம் பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த நாள், நேரம் தெரியுமா என்றால் 2010 ஆண்டு ஆகும். நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் பிரச்சனை நடத்தது மட்டும் தெரியும்.

3. அதன் பின்னிட்டு இடம் சம்பந்தமாக பிரச்சனை எதுவும் ஏற்பட்டதா என்றால் அன்றே காவல் நிலையத்தில் நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை தாவா சொத்தை பொறுத்து எனக்கு முழு தகவல் எதுவும் தெரியாத காரணத்தினால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.06 10:37:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.